நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி
முன்னிலை, திருமதி.S.முத்து லெட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தென்காசி
2026ம் வருடம் ஜீன் திங்கள் 2ம் நாள் செவ்வாய்கிழமை
குற்றப்பலவகை மனு எண்.728/2026
CNR.No.TNTS02-002073-2026
IN
குற்ற எண்.318/2025
IN
CC.NO.734/2025

சங்கர்,
த/பெ.ஆலகாலசுந்தரம் ... மனுதாரர்/எதிரி

/எதிர்/

அரசுக்காக – காவல் உதவி ஆய்வாளர்,
சேர்ந்தமரம் கா.நி.கு.எண்.318/2025 ... எதிர்மனுதாரர்/புகார்தாரர்

இம்மனு இறுதியான விசாரணைக்காக இன்று இந்நீதிமன்றத்தில் வந்தபோது மனுதாரருக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.மாரிஅரசன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரருக்காக கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை–II அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும் மற்றும் வழக்கு ஆவணங்கள் அனைத்தையும் பார்வையிட்டு பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் ...

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்/எதிரிக்கு பிரிவு 480 BNS ன் கீழ் பிணை வழங்க வேண்டி பிணை மனு தாக்கல் செய்துள்ளார்.

**2. மனுவின் சுருக்கம்** :–

மனுதாரருக்கு எதிராக U/s.331(3), 305(a) BNS ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் எவ்வித குற்ற செயல்களிலும் ஈடுபடவில்லை என்றும், மனுதாரர் தலைமறைவாக மாட்டார் என்றும், மனுதாரர் ஜாமீன்தாரர்களை முன்னிருத்த தயாராக இருக்கிறார் என்றும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. அரசு தரப்பு பதிலின் சுருக்கம்** :–

மேற்படி வழக்கின் எதிரியின் வழக்கு விசாரணையில் உள்ளது என்றும், மேற்படி எதிரிக்கு பிணை வழங்கினால் எதிரி விசாரணைக்கு ஆஜர் ஆகாமல் தலைமறைவாக வாய்ப்புள்ளதால் எதிரிக்கு பிணை வழங்க கடுமையாக ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தீர்வு** :–

4. ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும் போது, மனுதாரர்/எதிரி கடந்த 13.09.2025 முதல் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என்பது தெரியவருகிறது. முதல் தகவல் அறிக்கையில், புகார்தாரர் கடந்த 10.09.2025 ம் தேதி மாலை சுமார் 03.00 மணிக்கு இவ்வழக்கின் 1–வது சாட்சி கல்யாணசுந்தரமும், அவரது மனைவி 2–வது சாட்சி வசந்தமல்லிகாவும் வீட்டில் இல்லாத போது எதிரி சங்கர் 1–வது சாட்சியின் வீட்டிற்கு சென்று சாத்தியிருந்துள்ள தலைவாசல் கதவை திறந்து உள்ளே சென்று சாமிபடத்திற்கு பக்கமிருந்த சாவியை எடுத்து முன்பக்க கதவை திறந்து உள்ளே சென்று பெட்ரூம் கதவை திறந்து அங்கிருந்த கபோர்டில் இருந்த பீரோவின் சாவியை எடுத்து பீரோவை திறந்து அதிலிருந்த 2–வது சாட்சியுனுடைய ரூபாய் 3 1/2 லட்சம் மதிப்புள்ள சுமார் 50.60 மில்லி கிராம் எடையுள்ள தங்க ஆரம் கவர்னர் மாலை ஒன்று, ரூபாய் 2.10 லட்சம் மதிப்புள்ள சுமார் 32.04 மில்லி கிராம் எடையுள்ள தங்க நெக்லஸ் ஒன்று, ரூபாய் 2.94 லட்சம் மதிப்புள்ள சுமார் 42.56 மில்லி கிராம் எடையுள்ள தங்க வளையல்கள் நான்கு, ரூபாய் 42,000/– மதிப்புள்ள சுமார் 6.22 கிராம் எடையுள்ள பச்சைக்கல் பதித்த தங்க கம்மல் ஒரு ஜோடி, ரூபாய் 56,000/– மதிப்புள்ள சுமார் 8.05 மில்லி கிராம் எடையுள்ள பெரிய தொங்கு தங்க கம்மல் ஒரு ஜோடி, ரூபாய் 28,000/– மதிப்புள்ள சுமார் 3.94 மில்லி கிராம் எடையுள்ள பூ போட்டுள்ள தங்க மோதிரம் ஒன்று, ரூபாய் 26,000/– மதிப்புள்ள சுமார் 2.94 மில்லி கிராம் எடையுள்ள சிவப்பு கல் பதித்த தங்க மோதிரம் ஒன்று, ரூபாய் 26,000 /– மதிப்புள்ள சுமார் 3.18 மில்லி கிராம் எடையுள்ள கைகள் இணைத்துள்ள மாடல் கொண்ட தங்க மோதிரம் ஒன்று ஆக மொத்தம் ரூபாய் 10,22,000/– மதிப்புள்ள சுமார் 149.53 கிராம் எடையுள்ள தங்க நகைகளை கருப்பு நிறம் மற்றும் நீல நிறத்துடன் கூடிய Panasonic AIRCONDITIONER service kit என எழுதப்பட்ட தோள்பையில் எடுத்து வைத்துக் கொண்டு தன் சொந்த ஆதாயம் கருதி திருடிச் சென்றதாக புகார் கொடுக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு வழக்கு விசாரணையில் இருந்து வருவதை கருத்தில் கொண்டும், மேலும், அரசு தரப்பில், மேற்படி வழக்கின் எதிரியின் வழக்கு விசாரணையில் உள்ளது என்றும், மேற்படி எதிரிக்கு பிணை வழங்கினால் எதிரி விசாரணைக்கு ஆஜர் ஆகாமல் தலைமறைவாக வாய்ப்புள்ளதால் மேற்படி எதிரியை

பிணையில் விட ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டும், வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டும், நீதியின் நலனைக் கருத்தில் கொண்டும் மனுதாரர்/எதிரிக்கு பிணை வழங்கினால் அது நீதியின்பால் உகந்ததாக இருக்காது என இந்நீதிமன்றம் முடிவு செய்து, மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

முடிவில், இம்மனு மேற்சொன்னவாறு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026 ம் வருடம் ஜீன் திங்கள் 2 ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

MUTHU LAKSHMI

Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.05.26 17:25:01 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.